# கீழக்கரை நகர்மன்ற 18.02.2019ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள் :1**

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 04/01/2019 அன்று நடைபெற்ற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 104/2014/பி1 நாள் 31.12.2018 ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின் படி இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் சேரும் குப்பைகளை வார்டு வாரியாக **Route Chat Map Autocad Software** மூலம் தயார் செய்த வகைக்கு **ஜி.ராஜகோகிலா** ஆர்.கே. ஆட்டோ கோர்டு சென்டர், பட்டணம்காத்தான், இராமநாதபுரம் அவர்களின் பட்டியல் தொகை ரூ.27,300/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்.எண்.518 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :2**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள உள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான கீழ்க்காணும் தெருமின் விளக்கு பராமரிப்பு பொருட்கள் 2019–20 ஆம் ஆண்டுக்கு வாங்கித் தருமாறு இந்நகராட்சி மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான பராமரிப்பு பொருட்கள் 2019–20 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.8,00,000/– ஆகும் என்று பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**தேவைப்படும் பொருட்கள்.**

| | | |
|---|---|---|
| 1 | 40 W குழல் விளக்கு | 150 எண்ணம் |
| 2 | 40 W சோக் | 100 எண்ணம் |
| 3 | 40 W ஸ்டார்டர் | 150 எண்ணம் |
| 4 | 250 W SPVL சோக் | 50 எண்ணம் |
| 5 | 250 W SPVL பல்ப் | 50 எண்ணம் |
| 6 | 250 W SPVL கண்டன்சர் | 50 எண்ணம் |
| 7 | 250 W SPVL இக்னேட்டர் | 50 எண்ணம் |
| 8 | T5 2 x 24W CFL சோக் | 200 எண்ணம் |
| 9 | T5 1x 24W CFL சோக் | 100 எண்ணம் |
| 10 | T5 24W CFL பல்ப் | 1100 எண்ணம் |
| 11 | 2x36W CFL சோக் | 100 எண்ணம் |
| 12 | 36 w CFL பல்ப் | 200 எண்ணம் |
| 13 | 25w LED சோக் | 75 எண்ணம் |
| 14 | 1.5sq mm வயர் | 900 Meter |
| 15 | 4 sq mm வயர் | 540 Meter |
| 16 | டைமர் சுவிட் (அனலாக்) | 3 எண்ணம் |
| 17 | காண்டாக்டர் (63A) | 3 எண்ணம் |

**கோப்பு எண். 73 /2019/ இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. இந்நகராட்சி பொதுமக்கள் நலன்கருதி தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு உத்தேச செலவினம் ரூ.8,00,000–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு பொருட்களை ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்.எண்.519 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :3**

பேரிடர் மேலாண்மை ஆணையாளர், சென்னை, அலுவலக கடிதம் எண்.N.C-II(2)/2350/2017 நாள்:19.01.2019–ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இராமநாதபுரம் மாவட்டத்தில் எதிர்வரும் கோடைக்கால வறட்சியை தவிர்த்திடவும் உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரத்தை பெருக்கிடும் வகையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் 22.01.2019–ந் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சி உள்ளூர் குடிநீர்திட்ட ஆதாரத்தை பெருக்கி பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர்வழஙக வழிவகை செய்யும் பொருட்டு 2019–ம் ஆண்டுக்கு வறட்சி நிவாரண திட்ட நிதியை எதிர்நோக்கி 2018–19 ம் ஆண்டு குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 30.01.2019 –ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்காணும்,அனுமதியை தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் பரமக்குடி ஊராட்சி ஒன்றிய ஆய்வுக்கூட்டரஙகில் 08.02.2019–ந் தேதி பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்ற கணிப்பாய்வு அலுவலர், ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக,2019–ம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு 15.02.2019–ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ.எண் | திட்டம்/வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19 (வறட்சி நிவாரண திட்டப்பணிகள்) | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 11 எண்ணம் கொண்ட ஆழ்துளை கிணறுகளை மராமரத்து பணி செய்தல்.(Existing Bore Well Flushing & Repairing) | 1.50 | திரு.பி.சிவக்குமார், முனீஸ்வரம், கீழக்கரை, | மதிப்பீட்டு தொகைக்கு 0.38 % குறைவு |
| | | | திரு.எஸ்.முனியசாமி, 4/5,மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 0.52% கூடுதல் |

**(கோப்பு எண். 39/ 2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டை தொகைக்கு **0.38%** சதவிகிதம் குறைவாக விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் **திரு. பி.சிவக்குமார்,** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம்.எண்.520 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :4**

பேரிடர் மேலாண்மை ஆணையாளர், சென்னை, அலுவலக கடிதம் எண்.N.C-II(2)/2350/2017 நாள்:19.01.2019–ந் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இராமநாதபுரம் மாவட்டத்தில் எதிர்வரும் கோடைக்கால வறட்சியை தவிர்த்திடவும் உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்கும் பொருட்டு உள்ளூர் குடிநீர் திட்ட ஆதாரத்தை பெருக்கிடும் வகையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், அவர்களின் 22.01.2019–ந் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சி உள்ளூர் குடிநீர்திட்ட ஆதாரத்தை பெருக்கி பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர்வழஙக வழிவகை செய்யும் பொருட்டு 2019–ம் ஆண்டுக்கு வறட்சி நிவாரண திட்ட நிதியை எதிர்நோக்கி 2018–19 ம் ஆண்டு குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு 30.01.2019 –ந் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்காணும்,அனுமதியை தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் பரமக்குடி ஊராட்சி ஒன்றிய ஆய்வுக்கூட்டரஙகில் 08.02.2019–ந் தேதி பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்ற கணிப்பாய்வு அலுவலர், ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக,2019–ம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு 15.02.2019–ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்த புள்ளிகள் மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ.எண் | திட்டம்/வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2018–19 (வறட்சி நிவாரண திட்டப்பணிகள்) | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட சேதுகரை, மாலாஙகுண்டு பகுதிகளை உள்ள திறந்த வெளி கிணறு (15 எண்ணம்) மராமத்து பணி மற்றும் நகராட்சிக்குட்பட்டபகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்கள் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல். | 8.50 | திரு.எஸ்.முனியசாமி, 4/5,மாரியம்மன் கோவில் தெரு, இராமநாதபுரம். | மதிப்பீட்டு தொகைக்கு 0.17 % குறைவு |
| | | | திரு.பி.சிவக்குமார், முனீஸ்வரம், கீழக்கரை, | மதிப்பீட்டு தொகைக்கு 0.14% கூடுதல் |

**(கோப்பு எண். 39/ 2019/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டை தொகைக்கு 0.17% சதவிகிதம் குறைவாக விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் **திரு.எஸ்.முனியசாமி,**என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>தீர்மானம்.எண்.521அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :5</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 8 சங்குளிகாரத் தெரு வார்டு எண் 14–ல் புதிதாக பதிக்கப்பட்ட DI மெயின் குடிநீர் குழாய்கள் மற்றும் DI பகிர்மான குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு அப்பகுதிகளில் செல்லும் பகிர்மான குழாய்களில் இருந்து வீட்டு குடிநீர் இணைப்புகள் வழஙகப்பட்டு வருவதாகவும், மேற்படி DI மெயின் குழாய்களிலிருந்து DI பகிர்மான குடிநீர் குழாய்களுக்கு தண்ணீர் வாரதால் இக்குழாய்களில் Tee அமைத்து இணைப்புகள் செய்வதற்கு அனுமதி வேண்டி இவ்வலுவலக குடிநீர் குழாய் பொருத்துனரால் கோரப்பட்டுள்ளது.

மேற்படி,புதிதாக அமைக்கப்பட்ட DI குடிநீர் குழாய்களில் Tee அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் சீராக கிடைக்கும் பொருட்டு தண்ணீர் பயன்பாடு அவசியத்தை கருத்தில் கொண்டு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.28,500/–ஆகும் என இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**(கோப்பு எண்.58/2019/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து ரூ.28,500/–ஐ மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம்.எண்.522அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :7</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதிகளில் நுண் உரம் செயலாக்க மையம் (Construction of Micro Composted Centre) அமைக்கும் பொருட்டு உரஙகிடஙகில் மலைபோல் கொட்டப்பட்டு குவிந்துள்ள குப்பை கூளஙகளை ஹிட்டாச்சி வாகனம் மூலம் அப்புறப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள ரூ.5,50,000/–க்கு இந்நகர் மன்றத்தில் 30.01.2019–ந்தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் ஹிட்டாச்சி வாகனம் மூலம் அகற்றும் பணிகள் செய்து கொடுப்பதற்கு 11.02.2019–ந் தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனம்/ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | கார்த்திக் எர்த் மூவர்ஸ்<br>34/1, மாரியம்மன் கோவில் தெரு,<br>இராமநாதபுரம். | ரூ.2100/– |

| | | |
|---|---|---|
| 2 | வெஙகடேஷ்வரா எர்த் மூவர்ஸ்,<br>15, ரயில்வே பீடர்ரோடு,<br>இராமநாதபுரம். | ரூ.2250/– |
| 3 | ஸ்ரீ சென்றாய பெருமாள்<br>எர்த் மூவர்ஸ்,<br>ஒட்டப்பட்டி, ஊத்தஙகரை, | ரூ.2500/– |

**(கோப்பு எண். 635/2018/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

ஒப்பு நோக்கு பட்டியலில் கண்டுள்ளபடி, ஹிட்டாச்சி வாகனம் வாடகை 1 மணி நேரத்திற்கு ரூ.2100 /– (வண்டி வாடகை, எரிபொருள் , டிரைவர் பேட்டா உட்பட ) குறைந்த விலைப்புள்ளி வழஙகிய கார்த்திக் எர்த் மூவர்ஸ், இராமநாதபுரம் விலைப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம்.எண்.524அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :8</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதார பிரிவு உரக்கிடஙகில் குவிந்து கிடக்கும் குப்பைகளை மக்க பயன்படுத்தப்படும் E.M.சொலிஸன் – 200 லிட்டர் மற்றும் அலுவலகஙகள், பள்ளிக்கூடஙகள் , மருத்துவமனைகள், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பகுதிகளில் குப்பைகள் சேகரிக்கும் இடஙகள் வீடுகள் ஆகியவற்றின் உள்ளே மற்றும் வெளியே கொசு, ஈ, ஆகியவற்றினால் உண்டாகும் தொற்று நோய்களைதடுக்கும் லெமன் கிராஸ் ஆயில் – 100 லிட்டர் மற்றும் கிருமி நாசினி மருந்து லைசால் (Lysol) 100 லிட்டர் வீதம் இந்நகர் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு வாஙகி வழஙகிடுமாறு இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான உத்தேச செலவீனம் ரூ 4,75,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கிருமி நாசினி மருந்துகள் வாஙகுமாறு கேட்டுக்கொண்டுள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரின் குறிப்பு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.
**(கோப்பு எண் 122/2019/எச்1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. உத்தேச செலவீனம் ரூ 4,75,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. நிர்வாக நலன் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளி பெற்று கிருமிநாசினி மருந்துகள் வாஙக மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம்.எண்.525அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :9</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெஙகு மற்றும் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக தீவிர கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான பைரித்திரம் 200 லிட்டர் (Pyrethirum 2%) மற்றும் கொசு புழுமருந்து

(Larvicide) டெமிபாஸ் (அபேட்) மருந்து – 200 லிட்டர் வீதம் பொதுசுகாதார நலன் கருதி வாங்கி வழங்கிடுமாறும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 4,25,000/– ஆகும் எனவும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகர் மக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்காணும் கொசு ஒழிப்பு மருந்துகளை அரசுதுறை நிறுவனமான தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் சென்னை கடிதம் RefNo:015/M(P)/INSECT-LARVI(II)/ TNMSC/2017 Date : 14/11/2018-ன் படி அனுமதி பெற்றுள்ள M/S Paramount Pesticides Limited நிறுவனத்தில் வாங்குவதற்கு அனுமதி கோரியுள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரின் குறிப்பு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் 121/2019/எச்1)**

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. உத்தேச செலவீனம் ரூ 4,25,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

2. நிர்வாக நலன் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கொசு ஒழிப்பு மருந்துகள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம்.எண்.526அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள் :10</u>

**இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு, உத்தேச மதிப்பீடு ரூ.217.95 லட்சத்திற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. இந்த மதிப்பீட்டிற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018 நாள்.12.11.2018–ன்படி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய உரங்கிடங்கில், திண்டுகல், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மூலமாக மண் பரிசோதனை செய்ததில், மண்ணின் பழுதாங்கும் திறன் (Safe Bearing Capacity of Soil) குறைவாக உள்ளதால், மண்ணின் தன்மைக்கு ஏற்ப, (Pile Foundation) அஸ்திவாரம் அமைத்து கழிவு நீர் சுத்தகரிப்பு கட்டிட அமைப்புகள் (Fecal Sludge Treatment Plant) கட்டுமாறு திண்டுகல், அண்ணா பல்கலைக்கழகத்தால் தொழில்நுட்ப ஆலோசனை அறிக்கை வழங்கப்பட்டதின்படி, திருத்திய திட்ட மதிப்பீடு (Revised Project Report) ரூ.340.00 இலட்சத்திற்கு (IUDM -2018-19 Share-Rs.113.90 & IUDM -2019-20 Share-Rs.113.90 & SBM GOI 33% share Rs.112.20) நிதி ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018–1 நாள்.11.12.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 22.01.2019–ம் தேதி மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால்**

ஆய்வு செய்து 31.01.2019–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 06.02.2019–ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

<u>மதிப்பீடு ரூ. 340.00 லட்சம்</u>

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்தில் உள்ள இந்நகராட்சி உரக்கிடங்கில் நாளொன்றிற்கு 20முடுனு கொள்ளளவு கொண்ட மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) கட்டும் பணி. | திரு.எஸ்.எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், எண்.3/538–பி9, சுந்தராஜபட்டணம், பரமக்குடி. | ரூ. 3,58,02,900/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 18.44% கூடுதல் |
| 2 | | திரு.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரர், 8/32, காமராஜ் நகர், முதுகுளத்தூர். | ரூ. 3,74,01,869/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 23.73% கூடுதல் |

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலில் குறைவாக விலை விகிதம் (+) 18.44% கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியன் என்பவரிடம் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு குறைவாக விலை குறைப்பு செய்து உடன்படிக்கை (Negotiation Made) செய்து கொள்ளுமாறு 06.02.2019ம் தேதி கோரியதில், ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியன் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.95 சதவீதம் கூடுதலாக விலை குறிப்பிட்டு 14.02.2019ம் தேதி விலை குறைப்பு செய்து கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் உடன்படிக்கை ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்தில் உள்ள இந்நகராட்சி உரக்கிடங்கில் நாளொன்றிற்கு 20முடுனு கொள்ளளவு கொண்ட மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் (குநஉயட ளுடரனபந கூசநயவஅநவே ஞடயவே) கட்டும் பணி. | திரு.எஸ்.எம்.சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், எண்.3/538–பி9, சுந்தராஜபட்டணம், பரமக்குடி. | ரூ. 3,17,44,421/– மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.95% கூடுதல் |

[கோப்பு எண்.1022/ 2018/இ1]

அலுவலகக் குறிப்பு.

1. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட (+) 18.44% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியன் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.95 சதவீதம் கூடுதலாக விலை குறிப்பிட்டு 14.02.2019ம் தேதி விலை குறைப்பு செய்து கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம்.எண்.527அனுமதிக்கப்பட்டது.**

பொருள் :11

கீழக்கரை நகராட்சி அலுவலக கட்டிடம் 1978 ஆம் ஆண்டு பேரூராட்சியாக இருந்த காலத்தில் முகம்மது சதக் அறக்கட்டளை மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டது. கீழக்கரை நகராட்சி தற்போது 21 வார்டுகளை உள்ளடக்கிய ஒரு இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர், பொதுப்பிரிவு பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், நகரமைப்பு பிரிவு பணியாளர்கள், வருவாய் பிரிவு பணியாளர்கள் மற்றும் பொதுசுகாதார நிர்வாக பிரிவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தையே இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின்படி இந்நகராட்சி கட்டிடத்தில் 14.03.2015–ந் தேதி முதல் தற்காலிகமாக புதிய வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தை வட்டாட்சியர் பணியாளர்கள் பயன்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டது. இந்நகராட்சி பணியாளர்களுக்கு அலுவலகத்தின் பின்புறம் ஒரு பொது கழிப்பிடம் அமைக்கப்பட்டு அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் ஆரம்ப நிலையிலிருந்தே ஆணையாளர் அறையில் கழிப்பிட வசதி ஏதும் இல்லாத நிலை உள்ளது. ஆகையால் தற்பொழுது ஆணையர் அறையில் ஒரு சிறிய கழிப்பிடம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி புதிய கழிப்பிடம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,10,000/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி ஒப்புதலுக்கு.

(கோப்பு எண். 64 /2019/ இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகராட்சி ஆணையாளர் அறையில் கழிப்பிட வசதி செய்ய வேண்டியதை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.1,10,000/—க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம்.எண்.528அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :10</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கழிவு நீர் சுத்தகரிப்பு அமைப்பு (Fecal Sludge Treatment Plant) அமைக்க ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு, உத்தேச மதிப்பீடு ரூ.217.95 லட்சத்திற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டது. இந்த மதிப்பீட்டிற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018 நாள்.12.11.2018–ன்படி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய உரங்கிடங்கில், திண்டுகல், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி மூலமாக மண் பரிசோதனை செய்ததில், மண்ணின் பழுதாங்கும் திறன் (Safe Bearing Capacity of Soil) குறைவாக உள்ளதால், மண்ணின் தன்மைக்கு ஏற்ப, (Pile Foundation) அஸ்திவாரம் அமைத்து கழிவு நீர் சுத்தகரிப்பு கட்டிட அமைப்புகள் (Fecal Sludge Treatment Plant) கட்டுமாறு திண்டுகல், அண்ணா பல்கலைக்கழகத்தால் தொழில்நுட்ப ஆலோசனை அறிக்கை வழுங்கப்பட்டதின்படி, திருத்திய திட்ட மதிப்பீடு (Revised Project Report) ரூ.340.00 இலட்சத்திற்கு (IUDM -2018-19 Share-Rs.113.90 & IUDM -2019-20 Share-Rs.113.90 & SBM GOI 33% share Rs.112.20) நிதி ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS–2/2018–1 நாள்.11.12.2018–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.26888/2018/DO2, நாள்.11.12.2018–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 22.01.2019–ம் தேதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தகாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப கூறல் (Technical Bid) ஒப்பந்த ஆவணத்தின்படி நிபந்தனைகளை நிறைவு செய்திருப்பதாக தொழில்நுட்ப கூராய்வு குழுவால் ஆய்வு செய்து 31.01.2019–ந் தேதி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் விலைக்கூறல் (Price Bid) 06.02.2019–ந் தேதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

<u>மதிப்பீடு ரூ. 340.00 லட்சம்</u>

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் ஒப்பந்ததொகை ரூபாய் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்தில் உள்ள இந்நகராட்சி உரக்கிடங்கில் நாளொன்றிற்கு 20முடுனு கொள்ளளவு கொண்ட மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் (குநஉயட ளுடரனபந கூசநயவஅநவே ஞடயவே) கட்டும் பணி. | திரு.எஸ்.எம்.சுப்ரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்.3/538–பி9,<br>சுந்தராஜபட்டணம்,<br>பரமக்குடி. | ரூ. 3,58,02,900/–<br>மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 18.44% கூடுதல் |
| 2 | | திரு.பாலசுப்பிரமணியன்<br>ஒப்பந்ததாரர்,<br>8/32, காமராஜ் நகர்,<br>முதுகுளத்தூர். | ரூ. 3,74,01,869/–<br>மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 23.73% கூடுதல் |

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்புநோக்கு பட்டியலின்படி மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதலில் குறைவாக விலை விகிதம் (+) 18.44% கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியன் என்பவரிடம் மதிப்பீட்டு விலைவிகிதத்திற்கு குறைவாக விலை குறைப்பு செய்து உடன்படிக்கை (Negotiation Made) செய்து கொள்ளுமாறு 06.02.2019ம் தேதி கோரியதில், ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியன் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.95 சதவீதம் கூடுதலாக விலை குறிப்பிட்டு 14.02.2019ம் தேதி விலை குறைப்பு செய்து கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரரின் உடன்படிக்கை ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | கீழக்கரை நகராட்சிக்கு சொந்தமான பள்ளமோர்குளம் கிராமத்தில் உள்ள இந்நகராட்சி உரக்கிடங்கில் நாளொன்றிற்கு 20முடுனு கொள்ளளவு கொண்ட மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் (குநஉயட ளுடரனபந கூசநயவஅநவே ஞடயவே) கட்டும் பணி. | திரு.எஸ்.எம்.சுப்ரமணியன்,<br>ஒப்பந்ததாரர்,<br>எண்.3/538–பி9,<br>சுந்தராஜபட்டணம்,<br>பரமக்குடி. | ரூ. 3,17,44,421/–<br>மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் 4.95% கூடுதல் |

[கோப்பு எண்.1022/ 2018/இ1]

<u>அலுவலகக் குறிப்பு.</u>

4. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி பிரிவு 2.7.2–ல் பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டை விட 5 சதவீதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.
5. மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

6. மேற்படி ஒப்பந்தகாரர் மதிப்பீட்டு தொகையை விட (+) 18.44% கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ளதை விலை குறைப்பு செய்து கொடுக்க கோரியதில், ஒப்பந்தகாரர் திரு.எஸ்.எம்.சுப்ரமணியன் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை காட்டிலும் (+) 4.95 சதவீதம் கூடுதலாக விலை குறிப்பிட்டு 14.02.2019ம் தேதி விலை குறைப்பு செய்து கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

<u>தீர்மானம்.எண்.527அனுமதிக்கப்பட்டது.</u>

<u>பொருள் :11</u>

கீழக்கரை நகராட்சி அலுவலக கட்டிடம் 1978 ஆம் ஆண்டு பேரூராட்சியாக இருந்த காலத்தில் முகம்மது சதக் அறக்கட்டளை மூலம் கட்டிக் கொடுக்கப்பட்டது. கீழக்கரை நகராட்சி தற்போது 21 வார்டுகளை உள்ளடக்கிய ஒரு இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்தில் நகராட்சி ஆணையாளர், பொதுப்பிரிவு பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், நகரமைப்பு பிரிவு பணியாளர்கள், வருவாய் பிரிவு பணியாளர்கள் மற்றும் பொதுசுகாதார நிர்வாக பிரிவு பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தையே இந்நகராட்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களும் பயன்படுத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின்படி இந்நகராட்சி கட்டிடத்தில் 14.03.2015–ந் தேதி முதல் தற்காலிகமாக புதிய வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்தை வட்டாட்சியர் பணியாளர்கள் பயன்படுத்துவதற்காக கொடுக்கப்பட்டது. இந்நகராட்சி பணியாளர்களுக்கு அலுவலகத்தின் பின்புறம் ஒரு பொது கழிப்பிடம் அமைக்கப்பட்டு அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் ஆரம்ப நிலையிலிருந்தே ஆணையாளர் அறையில் கழிப்பிட வசதி ஏதும் இல்லாத நிலை உள்ளது. ஆகையால் தற்பொழுது ஆணையர் அறையில் ஒரு சிறிய கழிப்பிடம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி புதிய கழிப்பிடம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,10,000/– ஆகும். இச்செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி ஒப்புதலுக்கு.

(கோப்பு எண். 64 /2019/ இ1)

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. இந்நகராட்சி ஆணையாளர் அறையில் கழிப்பிட வசதி செய்ய வேண்டியதை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.1,10,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>தீர்மானம்.எண்.528அனுமதிக்கப்பட்டது.</u>

**பொருள் :12**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 9–வது வார்டு பகுதிகளில் பொதுமக்கள் கழிவுநீரை வெளியேற்ற அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களுக்கு Man hole மற்றும் மூடிகள் அமைக்கப்படாததால் கழிவுநீர் குழாய்களில் ஆங்காங்கே உடைப்புகள் ஏற்பட்டு சாலைகளில் கழிவுநீர் வெளியேறுவதால் பொதுமக்கள் சாலையை பயன்படுத்த மிகவும் சிரமத்திற்கு ஆளாவதுடன் சுகாதார சீர்கேடும் ஏற்பட்டு வருகிறது. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. ஆகவே, கழிவுநீர் குழாய்களுக்கு புதிதாக Man hole மற்றும் மூடிகள் அமைத்து பொதுமக்களின் புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு ரூ.1,15,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 70 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொதுசுகாதார நலன் மற்றும் இந்நகர் 9–வது வார்டு பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொறியாளர்களால் ரூ.1,15,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்.எண்.529அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :13**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் 9 இடஙகளில் உயர்மின் கோபுர விளக்குகள் (High Mast Light) அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி உயர்மின் கோபுர விளக்குகள் இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி உயர்மின் கோபுர விளக்குகள் எரியாத நிலையில் இருப்பதால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அதில் தற்போது 7–இடஙகளில் உள்ள உயர்மின் கோபுர மின்விளக்குகளில் ஏற்பட்டுள்ள டைமர் பேனல் பழுதுகள் மற்றும் மின்விளக்குகளை இறக்கி ஏற்றும் இரும்பு கயிறு (ரோப்) தன்மை இழந்துள்ளதையும், சரிசெய்து உயர்மின் கோபுரவிளக்குகளை நல்ல முறையில் எரிய வைப்பதற்கு இவ்வலுவலக மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டஙகளில் உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்து வார்டுகளில் உள்ள தெருவிளக்குகள் 100 சதவீதம் எரிய வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மின்னஞ்சல் கடிதம் ந.க.எண்.5/3920/2018 நாள்.25.07.2018–ல் பொதுமக்களுக்கு 100 சதவீதம் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அறிவுரை வழஙகப்பட்டது, அதன்அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 ஏர்வாடி இணைப்பு சாலை, வார்டு எண்.19 சி.எஸ்.ஐ. சர்ச் அருகில், மற்றும் கிராம நிர்வாக அலுவலர் (VAO) அலுவலகம் அருகில், வார்டு எண்.10 மீன்மார்க்கெட் பகுதியில், வார்டு எண்.16 வடக்குத் தெரு கட்டாலிம்சா பஙகளா, வார்டு எண்.15 மேலத்தெரு, வார்டு எண்.9 பழைய கஸ்டம்ஸ் ஆபிஸ் அருகில் ஆகிய 7 இடஙகளில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகளை பழுது நீக்கம் செய்து இந்நகர் பொதுமக்களின் புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,80,000/–ஐ இந்நகராட்சி வருவாய்

நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 103 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. இந்நகர் பொதுமக்கள் நலன் மற்றும் பணிகளின் அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.6,80,000/– செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்.எண்.530அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :14**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி, இந்நகராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரில் 2 PPM அளவுக்கு குளோரின் இருக்க வேண்டும் எனவும், தற்போது டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், நகராட்சிப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டத்தினை (Gas/Liquid Chlorination System) செயல்படுத்துமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டங்களில் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

மேற்காணும் ஆய்வு கூட்ட அறிவுரைக்கிணங்க, இந்நகராட்சி மூலம் வழங்கப்படும் குடிநீரின் அளவு 2 PPM இருக்கும் பொருட்டு, இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு மேல்நிலை தொட்டிகள் (OHT) அமைத்துள்ள வளாகத்தில் திரவ நிலையில் குளோரின் செலுத்தும் திட்டம் (Liquid Chlorination System) செயல்படுத்தும் பொருட்டு, மேற்கண்ட இடத்தில் குளோரின் திரவம் கலந்து குடிநீர் விநியோகம் செய்யும் குளோரினேஷன் ஆலை (Liquid Chlorination Plant) அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு நாள் ஒன்றுக்கு குடிநீர் விநியோகத்திற்கு ஆகும் குளோரின் திரவத்தின் அளவு (Liquid) 60 லிட்டர் ஆகும். அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு ஒரு ஆண்டுக்கு தேவையான குளோரின் திரவத்தின் 22600 லிட்டர் ஆகும். இதற்கான உத்தேச செலவினம் (22600x29.50) ரூ.6,50,000/– மட்டும் இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளுவதற்கு நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 112/2019/இ1)

அலுவலகக் குறிப்பு.

இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து உத்தேச செலவினம் ரூ. 6,50,000/– மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம்.எண்.531அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :15</u>**

கீழக்கரை நகராட்சியில் 21 வார்டுகள் உள்ளன. 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 38355 ஆகும். இந்நகர மக்களுக்கு காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் சேதுக்கரை, மாலங்குண்டு உள்ளூர் குடிநீர் ஆதாரங்களை கொண்டு, இந்நகராட்சிக்குட்பட்ட கொந்தகருணை அப்பா தர்ஹா மணல்மேடு வளாகத்தில் அமைந்துள்ள ஒரு தரைமட்டத் தொட்டி மற்றும் இரண்டு மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து (OHT) இந்நகர் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் உள்ளூர் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சேதுக்கரை மற்றும் மாலங்குண்டு பகுதியில் இருந்து வரும் குடிநீர் தினசரி எவ்வளவு அளவு என சரியாக கணக்கிட முடியாத நிலை உள்ளது. எனவே, சேதுக்கரை மற்றும் மாலங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையங்களிலிருந்து அமைக்கப்பட்டுள்ள 180mm விட்டமுள்ள குடிநீர் குழாய்களில் புதிதாக 4" அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தி குடிநீரின் அளவினை கண்காணிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 120/2019/ இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. பொறியாளர்களால் ரூ.2,50,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி உள்ளூர் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சேதுக்கரை மற்றும் மாலங்குண்டு குடிநீர் ஏற்றும் நிலையங்களிலிருந்து அமைக்கப்பட்டுள்ள 180mm விட்டமுள்ள குடிநீர் குழாய்களில் புதிதாக 4" அளவு மானி (Magnetic Flow Meter) பொருத்தும் பணிகள் செய்வதற்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம்.எண்.532அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :16</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 20–வது வார்டு வடக்குத் தெரு டிராக்டர் கொட்டகை பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சிலாப் பழுதடைந்துள்ளதால் அப்பகுதி பொதுமக்கள் பயன்படுத்தப்படும் வீட்டு கழிவுநீர் சாலைகளில் செல்கிறது. அப்பகுதியில் கழிவுநீர் சாலையில் செல்வதால் பொதுமக்கள், வாகன ஓட்டுபவர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. மேலும் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

மேற்காணும் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு 20–வது வார்டு வடக்கு தெரு டிராக்டர் கொட்டகை பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகாலை உயர்த்திக் கட்டி சிமெண்ட் சிலாப் அமைப்பதற்கும் மற்றும் புதிதாக 8" பி.வி.சி. கழிவுநீர் குழாய்கள் அமைத்து வாழைக்கொல்லை வாறுகாலில் இணைக்கும் பணி செய்வதற்கு ரூ.3,75,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும்

பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 94 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு ரூ.3,75,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்.எண்.533 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :17

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 முத்துச்சாமிபுரம், அண்ணாநகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால் பயன்பாடற்ற நிலையில் இருப்பதால் அப்பகுதியில் மழைநீர் சாலைகளில் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகி, அப்பகுதிகளில் நோய்கள் பரவும் நிலையில் உள்ளது. ஆகவே, மேற்காணும் பகுதிகளில் மழைநீர் சாலையில் தேங்காமல் இருப்பதற்கு அங்கு அமைக்கப்பட்டு பயன்பாடற்ற நிலையில் உள்ள மழைநீர் வாறுகாலை சீரமைக்க வேண்டியுள்ளது.

எனவே, வார்டு எண்.2 முத்துச்சாமிபுரம், அண்ணாநகர் பகுதிகளில் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அவ்விடத்தில் உள்ள மழைநீர் வடிகால்களை சீரமைத்து மேல் மூடி போடும் பணி செய்வதற்கு ரூ.5,60,000/—க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சிப் பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன்வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 119/2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொதுசுகாதார நலனைக் கருத்தில் கொண்டு, ரூ.5,60,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்.எண்.534 அனுமதிக்கப்பட்டது.

## பொருள் :18

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, கொந்தகருணை அப்பா தர்ஹா எதிர்புறம் உள்ள ரூபி கார்டன் இடத்தில் Onsite Compost Centre அமைக்கும் பணி செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.22,000/—க்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.478, நாள் 30.11.2018—ன்படி அனுமதி

பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 08.02.2019–ம் தேதி வரப்பெற்ற கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். இ1/1157/2018 )**

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | விலையின் விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.பி. சிவக்குமார்,<br>சிவா இன்ஜினியரிங் காண்ட்ராக்டர்,<br>21/52, மெயின்ரோடு,<br>கீழக்கரை. இராமநாதபுரம் மாவட்டம் | ரூ.22,575/– |
| 2 | திரு. ஆர். உத்தண்டி,<br>இன்ஜினியரிங் காண்ட்ராக்டர்,<br>1/556-A நேரு நகர், 9வது தெரு<br>கலக்ட்ரேட்(போஸ்ட்), இராமநாதபுரம். | ரூ.23,000/– |
| 3 | திரு.சி.பழனி<br>CPA இன்ஜினியரிங் காண்ட்ராக்டர்,<br>2/70–7 புது பஸ் ஸ்டாண்ட் அருகில்<br>கீழக்கரை. இராமநாதபுரம் மாவட்டம் | ரூ.23,500/– |

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.22,575/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. சிவக்குமார், சிவா இன்ஜினியரிங் காண்ட்ராக்டர், கீழக்கரை விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம்.எண்.535அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :19**

**கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 பழைய கஸ்டம்ஸ் ரோடு பகுதி மெயின் ரோடு முதல் கடற்கரை பகுதி வரை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு சாலைகளில் கழிவுநீர் வெளியேறி தேங்கி கிடப்பதால் வாகனங்களிலோ அல்லது நடந்து செல்வதிலோ பொதுமக்களுக்கு மிகவும் சிரமமாகவும் சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளதாலும், அப்பகுதியில் கிருஸ்தவ வழிபாட்டு தளங்களும் பள்ளிக்கூடங்களும், உள்ளதால் நிரந்தர தீர்வாக புதிய கழிவுநீர் குழாய் மற்றும் ஜங்ஷன் பாக்ஸ் அமைத்து அப்பகுதி மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று பொதுமக்களால் புகார்கள் தெரிவிக்கப்பட்டு கீழக்கரை மக்கள் டீம் சமூக அமைப்பின் மூலம் கோரிக்கை வரப்பெற்றுள்ளது.**

**மேற்காணும் விண்ணப்பத்தின்படி, வார்டு எண்.3 பழைய கஸ்டம்ஸ் ரோடு பகுதி மெயின் ரோடு முதல் கடற்கரை பகுதி வரை நகராட்சிப் பொறியாளர்களால் பார்வையிடப்பட்டு ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பி.வி.சி. குழாய்கள் பழுதுகள் ஏற்பட்டு ஆங்காங்கே கழிவுநீர் சாலைகளில் செல்வதால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பள்ளி செல்லும் சிறுவர் சிறுமிகள் சாலைகளை பயன்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது என்றும், இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என்றும் ஆகவே, புதிதாக 8'' பி.வி.சி. கழிவுநீர் குழாய்கள் அமைத்து ஜங்ஷன் பாக்ஸ் மற்றும் மூடிகள் அமைக்கும் பணி செய்வதற்கு ரூ.3,85,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும்**

பொருட்டு இந்நகர்மன்ற அனுமதி பெறுவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது அனுமதிக்காக மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 51 /2019/இ1)

அலுவலகக் குறிப்பு:

1. பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு ரூ.3,85,000/—க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்.எண்.536 அனுமதிக்கப்பட்டது.

ஒம்/— ஆ. தனலெட்சுமி,பி.காம்
தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)
கீழக்கரை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (பொ)
கீழக்கரை நகராட்சி.